தேதி - **06.10.2025.**

அசல் வழக்கு எண்.173/2004

பி.வா.சா.1 - திரு. சுல்தான் அலாவூதின் (எ) சேட்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை

நான் 9ம் வகுப்பு வரை படித்துள்ளேன். 1997ல் நான் 9ம் வகுப்பு படித்தேன். 18 வயதிலிருந்து வெல்டிங் வேலை பார்த்து வருகிறேன். இன்றுவரை வெல்டிங் வேலை பார்த்து வருகிறேன். நான் வருமான வரி எதுவும் செலுத்தவில்லை. என்னிடம் வருமான வரி அடையாள அட்டை உள்ளது. வருமான வரி கணக்கு விவரம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. என்னுடைய தாயார் நல்ல உடல் ஆரோக்கியத்துடன் உள்ளார். அவர் 2ம் பிரதிவாதி. என் தகப்பனார் காஜா கமாலுதீன் இறக்கும் வரை சொந்தமாக வேன் ஓட்டி வந்தார். அவர் முதலில் மதுரையிலும் பிறகு சென்னையிலும் வேன் ஓட்டி வந்தார். என் தகப்பனாருக்கு வருமான வரி கணக்குள்ளதா என்று எனக்கு தெரியாது. வாதி என்ன சொத்தில் பங்கு கேட்கிறார்கள் என்ற விவரம் தெரியும். வாதியின் வழக்கு விவரங்கள் அனைத்தையும் எனக்கு தெரியும். பிராது சொத்து விவரம் தவறாக உள்ளது என எதிருரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால் சொல்லவில்லை. 1ம் பிரதிவாதி என் தகப்பனார் 2ம் பிரதிவாதி என் தாயார். 3 மற்றும் 5 முதல் 7 பிரதிவாதிகள் என்னுடை சகோதர சகோதரிகள். 1ம் வாதி என்னுடைய தகப்பனாரின் தாயார். 2 முதல் 5 மற்றும் 8 பிரதிவாதி என் தகப்பனாருடைய சகோதரிகள். என் தகப்பனாருடைய தகப்பனார் பெயர் சுல்தான் அலாவூதீன். சுல்தான் அலாவூதீன் தகப்பனார் பெயர் சையது இப்ராகிம் ராவூத்தர். சையது

இப்ராகிம்–ன் மனைவி பெயர் மரியம் பீவி. சையது இப்ராகிம்மிற்கு என்னுடைய தகப்பனார் நூர் முகமது, சிந்தா மஹார் மற்றும் கக்கானி பீவி ஆகியோர் மக்கள். சையது இப்ராகிம்மின் தகப்பனார் பெயர் நூர் முகமது. நூர் முகமதுக்கு சையது இப்ராகிம், ராவூத்தர் மற்றும் 3 பெண் மக்கள். 05.07.1963ல் சையது இப்ராகிம் ராவூத்தர், மரியம் பீவி மற்றும் மகன்கள் சுல்தான் அலாவூதான், நூர் முகமது, மற்றும் சிந்தா மஹார் மற்றும் பேரன் சிக்கந்தர் ஆகியோருக்கு செட்டில்மண்ட் ஆவணம் ஒன்றை எழுதிவைத்துள்ளார் என்று சொன்னால் அது சரிதான். அது வா.சா.ஆ.9 என்று சொன்னால் அது சரிதான். வா.சா.ஆ.9 மதுரை கீழவெளி வீதி கதவு எண்.28 சம்மந்தப்பட்டது. அதில் மரியம் பீவிக்கு ஆயுள் கால உரிமையும், மகன்கள் மற்றும் பேரனுக்கு பாத்தியப்படுத்தியும் எழுதிவைக்கப்பட்டுள்ளது. அதில் எ செட்டியுல் நூர் முகமது மற்றும் சிக்கந்தருக்கு ஒதுக்கப்பட்டது. பி செட்டியுல் என் தாத்தா சுல்தான் அலாவூதீனுக்கு ஒதுக்கப்பட்டது. அதில் மேற்படி கதவிலக்கம் 28ல் ரோட்டை ஒட்டி மேற்கு பகுதியில் 371 சதுரடி என் தாத்தா சுல்தான் அலாவதீனுக்கு ஒதுக்கப்பட்டது. அதை ஒட்டி கிழக்கே உள்ள பகுதி நூர் முகமதுக்கு ஒதுக்கப்பட்டது. அந்த சொத்துக்களை அவர்கள் வாக்கரலாக மாற்றிகொண்டார்கள். பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் நூர் முகமது, சுல்தான் அலாவூதின், சிந்தா மதார் மற்றும் மரியம் பீவி ஆகியோர் கையெழுத்து போட்டுள்ளார்கள். பி.வா.சா.ஆ.3ல் பி செட்யூலில் 1 இலக்க சொத்து தாவா 1வது இலக்க சொத்து என்று சொன்னால் அது சரிதான். 05.07.1963ம் தேதி சையது இப்ராகிம் ராவூத்தர் மற்றொரு செட்டில்மண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்று சொன்னார் அது தாவா 2வது சொத்து குறித்து எழுதி வைத்துள்ளார். அது வா.சா.ஆ.10 குறியீடு செய்யப்பட்டுள்ளது

என்று சொன்னால் அது சரிதான். அந்த ஆவணத்தில் கண்ட எ செட்யூல் சையது இப்ராகிம் ராவூத்தர் சொத்துக்களை அவரது நூர் முகமது மற்றும் பேரன் சிக்கந்தர் ஆகியோருக்கும் பி செட்யூல் சொத்தை என் தாத்தா சுல்தான் அலாவூதீனுக்கும், சி செட்யூல் சொத்தை சிந்தா மதாருக்கும் எழுதி வைத்துள்ளார். அந்த பி செட்யூல் சொத்து தாவா 2 வது இலக்க சொத்து என்று சொன்னால் அது சரிதான். 02.07.1963ல் சையது இப்ராகிம் ராவூத்தர் எனது தாத்தா சுல்தான் அலாவூதீன் மற்றும் 1ம் வாதி என் தகப்பனார் 1ம் பிரதிவாதி மற்றும் 2, 3 வாதிகள் மற்றும் அவர்களுக்கு பிறக்கப்போகும் குழந்தைகளுக்கு சொத்து எழுதிவைத்துள்ளார் என்று சொன்னால் பேரன்களுக்கு எழுதிவைக்கவில்லை. அந்த செட்டில்மண்ட் பதிவு நகல் என்னிடம் காண்பிக்கப்படுவது என்று சொன்னால் அது சரிதான். அந்த ஆவணம் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் டி.எஸ்.1214ல் 1066 சதுரடி செட்டில்மண்ட் எழுதிவைக்கப்ட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. வா.சா.ஆ.11 ல் கண்ட சொத்தை 1 முதல் 5 வாதிகளும் 1ம் பிரதிவாதியும் 8ம் பிரதிவாதியும் 1988 வாக்கில் வாக்கரலாக பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்று சொன்னால் எழுத்து பூர்வமாக பிரித்துக்கொண்டார். (அதில் தாவா சொத்துக்கள் 3ம் பிரிக்கப்பட்டது என சாட்சி கூறுகிறார்.) தாவா சொத்துகள் தவிற வேறு சில சொத்துகளையும் விட்டுவிட்டு சையது இப்ராகிம் இறந்துவிட்டார். சையது இப்ராகிம் இறந்தபிறகு பி.வா.சா.ஆ.3 ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரிதான். பி.வா.சா.ஆ.3ல் பி செட்யூல் சொத்தாக 3 சொத்துக்கள் என் தாத்தா சுல்தான் அலாவூதீனுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.3ல் பி செட்யூலில் கண்ட 1, 3 சொத்துக்கள் தாவா 1, 3 இலக்க சொத்துக்கள் என்று

சொன்னால் அது சரிதான். பி.வா.சா.ஆ.3ல் பி செட்யூல் கண்ட 1410 சதுரடி என்று சொன்னால் அது சரிதான். பி.வா.சா.ஆ.3ல் கண்ட 2வது இலக்க சொத்தையும் அதை ஒட்டிய சொத்தையும் சிந்தா மதார் மற்றும் கக்கானி பீவிக்கு பாத்தியப்பட்ட சொத்தையும் நில ஆர்ஜிதம் செய்தார்கள் என்று சொன்னால் அது சரிதான். அது சம்மந்தமாக LAOP 277/1983 முதலாவது சார்பு நீதிமன்றத்தில் நடைபெற்றது. அந்த வழக்கை என் தாத்தா இறந்தபிறகு என் தகப்பனார் தொடர்ந்து நடத்தினார். யார் யாருக்கு எவ்வளவு இழப்பீடு வழங்கவேண்டும் என்பது சம்மந்தமாக பிரிவு 30ன் கீழ் அந்த நடவடிக்கை நடந்து வந்தது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வழக்கின் தீர்ப்பின் படி என் தகப்பனார் ரூ.27,912.15 பைசா நஷ்ட ஈடு பெற்றார் என்று சொன்னால் அது சரிதான். எல்லா வாரிசுகளுக்கும் சேர்த்து தான் அவர் அந்த தொகையை வழங்கப்பட்டது என்று சொன்னால் அது சரிதான் ( அதை பிரித்துக்கொண்டார்கள் என்று சாட்சி கூறுகிறார்) என் தகப்பனார் என் தாத்தாவின் மற்ற வாரிசுகளுக்கு அதை பிரித்துக்கொடுத்ததாக ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. அந்த நஷ்டஈடு பரிகாரத்திற்கு எதிராக கூடுதல் தொகையாக LAOP.175/1984 வழக்கு செய்யப்பட்டது. அதில் கூடுதல் நஷ்ட ஈடு வழங்க தீர்ப்பானது. அதன் படி என் தகப்பனார் 3,95,753 கூடுதல் நஷ்ட ஈடாக பெற்றுள்ளார். ( அதை பிரித்துக்கொண்டார்கள் என்று சாட்சி கூறுகிறார்) என் தகப்பனார் என் தாத்தாவின் மற்ற வாரிசுகளுக்கு மேற்படி கூடுதல் தொகையையும் பிரித்துக்கொடுத்ததாக ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. மேற்படி தொகைகளை பங்கு பிரித்து கொடுக்கவில்லை என்றும் வாதிகளுக்கு உரிய பங்கை பிரித்து கொடுக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம்

என்று சொன்னால் அது சரியல்ல. தாவா 2 இலக்க சொத்தை நூர் முகமது நீதிமன்ற ஏலத்தில் கிரையம் பெற்றதாக காட்ட நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை. நூர் முகமதின் 3 மகள்கள் சையது இப்ராகிம்மிற்கு எதிராக வழக்கு தாக்கல் செய்து உத்தரவு பெற்ற தாக காட்ட ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை. மேற்படி பாகவழக்கு சம்மந்தமாகவும் ஏலம் சம்மந்தமாகவும் எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. 1988செப்டம்பர் முதல் வாரத்தில் சுல்தான் அலாவூதீனின் வாரிசுகளுக்கு இடையே பாகம் நடைபெற்றதாக ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. 1988 செப்டம்பர் முதல் வாரத்தில் நான் சொன்னது போல் பாகப்பிரிவினை நடைபெறவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. எனது எதிர் வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளது போல் பாகப் பிரிவினை நடைபெறவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. தாவா 2வது இலக்க சொத்தை பொருத்து எதிர் வழக்குரையில் நான் குறிப்பிட்டுள்ள கணக்குப்படி பார்த்தால் தாவா சொத்தைவிட கூடுதலான சொத்துக்கள் பாகம் பிரிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. தாவா 3இலக்க சொத்து 7194 சதுரடி என்று சொன்னால் 13 கால் செண்டாகும். பி.வா.சா.ஆ.4 முழுமையான ஆவணம் இல்லை என்று சொன்னால் மீதி பகுதி இல்லை. மீதி பகுதியை வீட்டில் தேடவேண்டும் என சாட்சி கூறுகிறார். பி.வா.சா.ஆ.4 ஆவணம் பதிவு செய்யப்படாத ஆவணம். அது சாட்சிய சட்டபடி ஏற்கத்தக்கதல்ல என்று சொன்னால் அது சரியல்ல. பி.வா.சா.ஆ.8 ஆவணம் என் மூலமாக குறியீடு செய்யப்பட்டது சட்டபடி ஏற்கத்தக்கதல்ல என்று சொன்னால் அது சரியல்ல. பி.வா.சா.ஆ.8ல் குறிப்பிட்டுள்ளபடி சொத்துரிமை மாற்றாக்கம் செய்யப்படவில்லை என்றும், வா.சா.ஆ.11 மூலம் தான் உரிமை

மாற்றம் ஏற்பட்டது என்றும் சொன்னால் அது சரியல்ல. பி.வா.சா.ஆ.15 ல் கட்டுப்பட்ட சொத்து வா.சா.ஆ.11ல் கட்டுப்பட்ட சொத்து என்று சொன்னால் அது சரிதான். லைத்துள் பஜாரியாவுக்கு 2ம் வாதி 15.08.1991ம் தேதி அடமானம் வைத்ததாக காட்ட ஆவணம் எதுவும் நான் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. அந்த சொத்தை ஒத்தி வைக்கப்பட்டதாக காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் தாக்கல் செய்யவில்லை. 20.01.1993ல் சரிபா பீவிக்கு 2ம் வாதி கிரையம் செய்து கொடுத்ததாக ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. எனது எதிர் வழக்குரை மற்றும் ஆவணங்களில் 16.09.1988ன் தேதி பாகப் பிரிவினை நடைபெற்றதாக கூறியுள்ள சங்கதிகள் பொய் என்று சொன்னால் அது சரியல்ல. பி.வா.சா.ஆ.14ல் வா.சா.ஆ.11ன்படி சொத்து மாற்றக்கம் செய்யப்பட்டுள்ளது குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் குறிப்பிடப்பட்டுள்ளது. பி.வா.சா.ஆ.14ல் என் அப்பா சாட்சி கையெழுத்து போட்டுள்ளார் என்று அது பற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.7ல் குறிப்பிடப்பட்டுள்ள அடமானம் தீர்க்கப்பட்டதாக காட்ட ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அதற்கு ரசீது தனியாக உள்ளது. அதை நான் தாக்கல் செய்யவில்லை.

Sd/- சுல்தான் அலாவூதின் (எ) சேட்

திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

Sd/- G.Muthukumaran
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.